Destination For Desired Learners
Shiksha By Swathika
An IAS Academy




# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள்-2024


www.shikshabyswathikaiasacademy.com
Phone : 8608830102 | 9047051911

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

தமிழ்நாடு....2
மாநில செய்திகள்....10
தேசிய செய்திகள்....16
சர்வதேச செய்திகள்....21
இராணுவ செய்திகள்....22
அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்....22
சுற்றுச்சூழல் செய்திகள்....23
விளையாட்டு செய்திகள்....25
விருதுகள் மற்றும் நிகழ்வுகள்....26
நியமனங்கள்....30
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்....30
முக்கிய தினங்கள்....33


Website: www.shikshabyswathikaiasacademy.com
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Follow insta : tnpsc.shikshabyswathika
Phone : 8608830102/ 9047051911

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

# தமிழ்நாடு

### முதல் பசுமை ஹைட்ரஜன் மையத் துறைமுகம்

1. உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட **ஹைட்ரஜன் எரிபொருள் மின்கலத்தில்** இயங்கும் **'சுச்சேதா'** என்று பெயரிடப்பட்ட இந்தியாவின் **முதல் படகு கொச்சியில்** அறிமுகப்படுத்தப்பட்டது.
2. **V O சிதம்பரனார் துறைமுகம்** ஆனது நாட்டின் முதல் பசுமை ஹைட்ரஜன் மையத் துறைமுகம் ஆகும்.

### பல்வேறு மனிதர்களின் சிலைகள்

1. ராணிப்பேட்டையில் மறைந்த தமிழறிஞர் **மு.வரதராசன் சிலையை** முதல்வர் திறந்து வைத்தார்.
2. **வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில்** மறைந்த தமிழறிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான **அண்ணல் தங்கோவின் சிலைகளும்**, செங்கல்பட்டு மாவட்டம் **அச்சரப்பாக்கத்தில்** மறைந்த சாதி ஒழிப்புப் போராளி **ரெட்டைமலை சீனிவாசனின்** சிலைகளும் திறந்து வைக்கப்பட்டன.


### குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளம்

1. சிறிய செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவுவதற்காக அமைக்கப்பட உள்ள குலசேகரப்பட்டினம் விண்வெளி ஏவு தளம் **ஆனது இரண்டு ஆண்டுகளில்** கட்டி முடிக்கப் படும்.
2. **இது ஆண்டிற்கு சுமார் 24 செயற்கைக்கோள்களை** விண்ணில் செலுத்தும் திறன் கொண்டதாக இருக்கும்.
3. இஸ்ரோவின் **ஸ்ரீஹரிகோட்டா ஏவு தளத்திலிருந்து** ஒரு செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்படும் போது ஏவு கலம் **முதலில் கிழக்கு நோக்கிச் சென்று, பின்னர் தெற்கு நோக்கி திரும்பும்.**


Website: www.shikshabyswathikaiasacademy.com
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Follow insta : tnpsc.shikshabyswathika
Phone : 8608830102/ 9047051911

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

4. ஆனால் **குலசேகரன்பட்டினம் விண்வெளி** ஏவு தளத்திலிருந்து செயற்கைக்கோள் ஏவப்படும் போது இந்த **திசைதிருப்பல் செயல்பாட்டின் அவசியம் இருக்காது** என்பதால் ஏவு கலங்கள் நேராக தெற்கு திசையில் பயணிக்க முடியும்.
5. மேலும், ஸ்ரீஹரிகோட்டாவை விட குலசேகரப்பட்டினம் **பூமத்திய ரேகைக்கு (நிலநடுக்கோட்டிற்கு) அருகில்** உள்ளது.
6. **500 கிலோ கிராமிற்கும் குறைவான** எடையுள்ள செயற்கைக்கோள்களைப் புவி தாழ் மட்ட சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு **SSLV ஏவு வாகனங்கள்** பயன்படுத்தப் படுகின்றன.




## மாநில அரசின் புதிய மின் ஆளுகை முன்னெடுப்பு

1. தமிழ்நாடு அரசு ஆனது, **தமிழ்நாடு பொது நிதி கண்காணிப்பு அமைப்பை** (TNPFTS) அறிமுகப்படுத்தியுள்ளது.
2. இது **நடைமுறைகளை எளிமையாக்குதல், கருவூலம் முதல் கடைநிலைப் பயனர்கள்** வரையிலான நிதி செயல்பாட்டினை முழுமையாகக் கண்காணித்தல் மற்றும் செலவினங்களை சீரமைத்தல் போன்றவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் சுய சேவைத் தேவைகளை எளிதாக்கும் வகையில் **'களஞ்சியம்' இணைய தளத்தினையும்** மற்றும் **கைபேசி செயலியினையும்** அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

## ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு

1. **முதுமலை புலிகள் வளங்காப்பகத்தின்** மையப் பகுதியில் முதன்முறையாக ஊர்வன இனங்களின் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
2. அந்தப் பிராந்தியத்தின் இருவாழ்விகள் மற்றும் ஊர்வன இனங்களின் பன்முகத் தன்மை காரணமாக 82 வெவ்வேறு இனங்களின் இங்கு பதிவு செய்யப்பட்டன.




## கழுவேலி நீர்பிடிப்புப் பகுதி

1. **விழுப்புரம் மாவட்டத்தில்** உள்ள கழுவேலி நீர்பிடிப்புப் பகுதியில் உள்ள ஏரி (குளம்) கட்டமைப்பினை, **உலக நினைவுச் சின்னங்கள்** நிதியத்தின் **கண்காணிப்பு 2025 திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுவதற்கு** பரிந்துரைக்கப்பட உள்ளது.
2. **செஞ்சி முதல் மரக்காணம் வரை ஆரோவில் பீடபூமி வரை** நீண்டுள்ள இந்த நீர்ப்பிடிப்புப் பகுதியானது **740 சதுர கி.மீ பரப்பளவைக்** கொண்டுள்ளது.
3. கண்காணிப்பு 2025 திட்டம் என்பது **ஒரு பரிந்துரை அடிப்படையிலான** திட்டமாகும்.


Website: www.shikshabyswathikaiasacademy.com
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Follow insta : tnpsc.shikshabyswathika
Phone : 8608830102/ 9047051911

4. இது **உள்நாட்டு பாரம்பரியத் தளங்களின் பாதுகாப்பை உலகளாவிய விழிப்புணர்வு** மற்றும் நடவடிக்கையுடன் இணைக்கிறது.




## நம்மாழ்வார் விருது 2024

1. இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டு அதை ஊக்குவித்ததற்காக **மூன்று விவசாயிகளுக்கு 2023-24 ஆம் ஆண்டிற்கான நம்மாழ்வார் விருதுகளை** தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.
2. 2.50 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் கொண்ட முதல் பரிசை **தஞ்சாவூரைச் சேர்ந்த கோ. சித்தர்** பெற்றுள்ளார்.
3. அவரைத் தொடர்ந்து **திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கே.வி.பழனிசாமி** மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கே.எழிலன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் பரிசை பெற்றனர்.

## HPV தடுப்பூசி திட்டம்

1. **விழுப்புரம் அரசு மருத்துவமனை** வளாகத்தில் உள்ள **அடையாறு புற்றுநோய் நிறுவன கண்காணிப்பு மையத்தில் HPV நிங்க தடுப்பூசி திட்டத்தை** முதல்வர் மு.க. ஸ்டாலின் சமீபத்தில் தொடங்கி வைத்தார்.
2. இதன்மூலம் **விழுப்புரம் மாவட்டத்தில் 9-14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு** கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்க்கான **இலவச தடுப்பூசி** வழங்கப்படும்.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024


3. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் முக்கியமாக **மனித பாப்பிலோமா வைரஸால் (HPV)** ஏற்படுகிறது.

## கடல்சார் உயர் இலக்கு படை

1. **தமிழ்நாடு வனத்துறை** கடல்சார் உயர் இலக்கு படை என்ற சிறப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.
2. **பாக் விரிகுடாவின் மன்னார் வளைகுடாவில்** உள்ள கடல் வளங்கள் சுரண்டப்படுவதற்கு எதிராக சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்தில் உள்ள பவளப்பாறைகள், **கடல் புல் மற்றும் பிற கடல்** தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை பாதுகாப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புதுமைப் பெண் திட்டம்

1. அரசு உதவி பெறும் பள்ளிகளில் **தமிழ் வழியில் படிக்கும் திட்டத்தின்** வரம்பை நீட்டித்து சமூக நலத்துறை அரசு ஆணை வெளியிட்டுள்ளது.
2. இதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் படிக்கும் **49,600க்கும் மேற்பட்ட மாணவிகள்** கூடுதலாக பயனடைவார்கள்.


49K More Girl Students In TN To Get Rs 1K Every Month
Over 49,000 more girl students studying in Tamil-Medium in government aided colleges across Tamil Nadu will get a monthly stipend of Rs.1000 in their bank accounts under the Moovalur Ramamirtham Ammaiyar Higher Education Assurance Scheme-Pudhumai Penn Scheme. The state government yesterday issued orders expanding the scheme to the students of aided colleges.

## நான்கு புதிய மாநகராட்சிகள்

1. **புதுக்கோட்டை, நாமக்கல், திருவண்ணாமலை, காரைக்குடி** ஆகிய நகரங்களை மாநகராட்சிகளாக தரம் உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
2. **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998ன்** கீழ் வகுக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க புதிய மாநகராட்சிகள் நிறுவப்படும்.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## இரண்டாவது உலகத் தமிழ்மையே செம்மொழி மாநாடு

1. **இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2025ம்** ஆண்டு ஜூன் மாதம் **ஐந்து நாட்கள் சென்னையில்** நடைபெறும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
2. **முதல் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 ஜூன் மாதம் கோவையில்** அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

## 'முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம்' (MGSMT)

1. இத்திட்டத்தின் கீழ் **கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில்** சாலைகளை மேம்படுத்த **தமிழக அரசு** 1,000 கோடியை ஒதுக்கியுள்ளது.
2. இந்தத் திட்டம் தொலைதூர கிராமங்களுக்கு தரமான சாலைகளின் வலையமைப்பை **2,000 கி.மீ வரை** விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## புலிகுத்திப்பட்டான் நடுகல்

1. **திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி விஜயநகரப் பேரரசு** காலத்தைச் அருகே சேர்ந்த புலிகுத்திப்பட்டான் நடுகல் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
2. **குடியிருப்புப் பகுதிகளில் இருந்து புலிகளை துரத்தும் போது உயிர் தியாகம் செய்தவர்களின் நினைவாக வாக** இது அமைக்கப்பட்டுள்ளது.

## கடன் வாங்குவதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது

1. தரவரிசை நிறுவனமான ICRA வெளியிட்ட தரவுகளின் படி, **தொடர்ந்து நான்காவது நிதியாண்டில் அதிக கடன் வாங்கும் மாநிலமாக** தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.
2. கடன் வாங்குவதில் தமிழ்நாட்டைத் தொடர்ந்து **மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசம்** உள்ளன.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## காலை உணவுத் திட்டத்தின் தாக்கம்

1. தமிழகத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள **1,543 அரசுப் பள்ளிகளுள் 1,319 பள்ளிகளில்** இந்த ஆண்டு **ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையில்** மாணவர்களின் வருகை அதிகரித்து உள்ளது.
2. **திருப்பத்தூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருவாரூர்** ஆகிய மாவட்டங்களில் உள்ள இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ள **அனைத்துப் பள்ளிகளிலும் 100% வருகைப் பதிவு** உள்ளது.
3. இந்த மாவட்டங்களைத் தொடர்ந்து **கிருஷ்ணகிரி (98.5%), கரூர் (97.4%) மற்றும் நீலகிரி (96.8%)** ஆகியவை இடம் பெற்றுள்ளன.
4. 1,086 பள்ளிகளில், **வருகை அதிகரிப்பு 20% ஆகவும், 22 பள்ளிகளில் 40 சதவீதத்திற்கு** அதிகமாகவும் பதிவாகியுள்ளன.


## PM SHRI பள்ளிகள் திட்டம்

1. தமிழகத்தில் PM SHRI என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக **மத்தியக் கல்வித் துறை அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள** தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
2. **பிரதான் மந்திரி - எழுச்சிபெறும் இந்தியாவிற்கான பள்ளிகள்** (PM SHRI) திட்டம் என்பது ஒரு மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டமாகும்.
3. இது **2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் அமலாக்கத்தைக் காட்சிப்** படுத்துவதையும், ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் ஒரு **முன்மாதிரியான பள்ளியாக உருவெடுப்பதையும்** மற்றும் அவற்றின் அருகிலுள்ள மற்றப் பள்ளிகளுக்கு ஒரு வழிகாட்டுதலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
4. PM SHRI பள்ளிகள் ஆனது மாணவர்களின் **அறிவாற்றல் வளர்ச்சிக்குத் தரமான ஒரு கற்பித்தலை** வழங்கும்.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## புலிகள் வளங்காப்பகத்திற்காக நிலம் கையகப்படுத்துதல்

1. **ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் வளங்காப்பகத்தின்** (SMTR) மையப் பகுதியில் அமைந்துள்ள **30.41 ஏக்கர்** அளவிலான **தனியார் பட்டா நிலத்தை முதன்முறையாக தமிழ்நாடு வனத்துறை கையகப் படுத்தியுள்ளது.**
2. **2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுசீரமைத்தல் மற்றும் மீள்குடியேற்ற சட்டத்தின்** நியாயமான இழப்பீடு பெறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமையின் கீழ் தனிப்பட்ட பேச்சுவார்த்தை மூலம் நிலம் கையகப்படுத்தப்பட்டது.
3. காடு மற்றும் பல்லுயிர் வளங்காப்பிற்கான வணிக ரீதியான பயன்பாட்டிற்காக மாநில அரசு தனியார் நிலத்தை வாங்குவது **இந்தியாவில் இதுவே முதல் முறையாகும்.**




## ஜவ்வாது மலையின் மேற்பகுதியில் பெருங்கற்காலக் கல்லறை

1. **திருவண்ணாமலையில் உள்ள ஜவ்வாது மலையில்** அமைந்த பட்டரகடு காப்புக்காடு பகுதியில் (RF) **100க்கும் மேற்பட்ட பெருங்கற்காலக் கல்லறைகளைத் தமிழக அரசின் தொல்லியல் துறை அதிகாரிகள்** கண்டறிந்துள்ளனர்.
2. ஒவ்வொரு கற்திட்டையும் சராசரியாக **7.5 மீட்டர் விட்டம் மற்றும் 1.5 மீட்டர் உயரம் கொண்டது.**

3. எந்தப் பொருட்களும் கிடைக்கப்பெறாத இதே போன்ற பெருங்கற்கால கற்திட்டைகள் ஆனது **மல்லச்சந்திரம் (கிருஷ்ணகிரி) மற்றும் கோயம்புத்தூர் பகுதியிலும்** கண்டறியப் பட்டுள்ளன.

## மாநில செய்திகள்

### பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா





1. அரசு மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப் படும் பெரும் சேதங்களுக்கு வன்முறையாளர்கள் பொறுப்பேற்கச் செய்யும் ஒரு மசோதாவை **உத்தரகாண்ட் அரசு** தாக்கல் செய்ய உள்ளது.
2. இதற்கு **உத்தரகாண்ட் மாநிலப் பொது மற்றும் தனியார் சொத்து சேத மீட்பு மசோதா** என்று பெயரிடப் பட்டுள்ளது.
3. **கலவரம் மற்றும் பிற இடையூறுகளை** ஏற்படுத்திய நபர்கள் இந்த மசோதாவின் கீழ் அதற்கான இழப்பீடுகளை வழங்க வேண்டும்.
4. **உத்தரப் பிரதேச மாநில அரசு ஆனது 2020** ஆம் ஆண்டில் இதே போன்ற மசோதாவை நிறைவேற்றியது.
5. இதைத் தொடர்ந்து **ஹரியானா மாநில அரசும் அத்தகைய சட்டத்தை** இயற்றியுள்ள நிலையில் அத்தகையச் சட்டத்தை இயற்றிய மூன்றாவது மாநிலமாக உத்தரகாண்ட் விளங்கும்.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## கியாசனூர் வன நோய்

1. **பொதுவாக குரங்குக் காய்ச்சல்** என்று அழைக்கப்படும் கியாசனூர் வன நோய் (KFD) பாதிப்புடன் கர்நாடகா மாநிலம் போராடி வருகிறது.
2. **ஃபிளவிவிரிடே வைரஸ் குடும்பத்தைச்** சேர்ந்த **கியாசனூர் வன நோய் வைரஸால்** (KFDV) குரங்குக் காய்ச்சல் ஏற்படுகிறது.





3. இந்த வைரஸ் முதன்முதலில் 1957 ஆம் ஆண்டில் கர்நாடகாவின் கியாசனூர் வனப் பகுதியில் **ஒரு நோய்வாய்ப்பட்டக் குரங்கிலிருந்து கண்டறியப்பட்டது.**
4. முதன்மையாக **ஒட்டு உண்ணி கடித்தல் அல்லது பாதிக்கப்பட்ட விலங்கு,** குறிப்பாக நோய் வாய்ப்பட்ட அல்லது சமீபத்தில் இந்தப் **பாதிப்பினால் உயிரிழந்த குரங்குடன் தொடர்பு கொள்வதன் மூலம்** மனிதர்களுக்கு இந்தப் பாதிப்பு ஏற்படுகிறது.

## ஷாபூர் கண்டி அணை திட்டம்


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

1. **ஜம்மு காஷ்மீர் எல்லையை ஒட்டியவாறு பஞ்சாபில்** வழியே பாயும் **ராவி நதியின்** மீது கட்டமைக்கப்படும் ஷாபுர்கண்டி அணையின் கட்டுமானப் பணிகள் நிறைவு செய்யப் பட்டுள்ளது.
2. இது **206 மெகாவாட்** நிறுவப்பட்ட திறன் கொண்ட **இரண்டு நீர்மின் நிலையங்களையும்** கொண்டுள்ளது.
3. **பஞ்சாப் மாநில அரசினால்** செயல்படுத்தப்படும் இந்தத் திட்டம், **ராவி நதியின் அதிகப் படியான நீரைக் குறைக்க** உதவும்.
4. சிந்து நதி கட்டமைப்பின் **மூன்று கிழக்கு ஆறுகளில்** ராவியும் ஒன்று ஆகும் என்பதோடு, அதன் **நீர் ஆனது சிந்து நீர் ஒப்பந்தத்தின்** கீழ் இந்தியாவின் பங்கினைச் சாரும்.
5. **ராவி நதி நீரை இந்தியா சிறப்பாகப் பயன்படுத்த** இது உதவும்.




## மாநில ஆற்றல் திறன் குறியீடு 2023

1. மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) என்பது பல்வேறு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் வருடாந்திர ஆற்றல் திறன் **செயல்திறனை மதிப்பிடுவதற்கும் ஒப்பிடுவதற்கும் பயன்படுத்தப்படும்** ஒரு மதிப்பீட்டுக் கருவியாகும்.
2. இந்த மதிப்பீட்டில் மிகவும் முன்னேற்றம் கண்டுள்ள மாநிலங்கள் **மகாராஷ்டிரா மற்றும் ஹரியானா ஆகும்.**

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. ஆற்றல் திறன் கொள்கைகளை செயல்படுத்துவதில் **கர்நாடகா முதலிடம் வகிக்கிறது** என்ற நிலையில் **ஆந்திரப் பிரதேசம் இரண்டாம் இடத்தைப்** பிடித்துள்ளது.
4. அதிக ஆற்றல் சார் உணர்வுள்ள **எதிர்காலத்திற்கான சுற்றுச் சூழலுக்கு நன்கு உகந்த** பல்வேறு நடைமுறைகளுக்கான வலுவான உறுதிப்பாடுகளுக்காக வேண்டி **சண்டிகர் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக** இந்தப் பரிசினை வென்றுள்ளது.

## ஹைதராபாத்தின் அரக்கு வளையல்கள்

1. ஹைதராபாத்தின் **அரக்கு அல்லது லாக் வளையல்களுக்கு** புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
2. **லாட் சந்தையின்** வளையல்கள் **பிரமிப்பூட்டும் கல் வேலைப்பாடுகளுக்கு** மிகப் பெயர் பெற்றவையாகும்.



3. அரக்கு வளையல்கள் என்பவை **மரப்பிசின் (பசை) கொண்டு தயாரிக்கப் படுகின்றன என்பதோடு**, இது வெப்பத்தினால் உருகக் கூடியது மற்றும் **நிறத்தை உறிஞ்சும் சிறப்பு திறன்** கொண்டது ஆகும்.

## தொழில்துறை புரட்சிக்கான மையம்

1. உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) **நான்காவது தொழில் துறைப் புரட்சிக்கான மையத்தின்** (C4IR) திறப்பு விழா **ஹைதராபாத் நகரில்** நடைபெற்றது.
2. **சுகாதாரம் மற்றும் வாழ்க்கை அறிவியலில்** கவனம் செலுத்தும் உலகின் முதலாவது கருப்பொருள் சார் மையம் இதுவாகும்.


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. C4IR என்பது **நிகழ் உலகச் சான்றுகள், சுகாதாரப் பகுப்பாய்வு மற்றும் தகவல், மற்றும் மென்பொருளினை** ஒரு மருத்துவச் சாதனமாகக் கருதுதல் ஆகிய மூன்று முக்கியப் பகுதிகளின் மீது கவனம் செலுத்துகிறது.


### மாநில குறிப்பிட்ட பேரிடர் - கேரளா

1. **மனித-விலங்கு மோதலை** மாநில-குறிப்பிட்ட பேரிடராக கேரளா அறிவித்தது, அவ்வாறு செய்த **நாட்டிலேயே முதல் மாநிலமாக** மாறியது.
2. தற்போது, **மனித-விலங்கு மோதலை நிர்வகிப்பது வனத்துறையின் பொறுப்பாகும்**, இது வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தின்படி செயல்படுகிறது.
3. **மாவட்ட பேரிடர்** அமைப்பின் தலைவர் என்ற முறையில் **மாவட்ட ஆட்சியர்கள்** நேரடியாக தலையிடலாம்.
4. **2015** ஆம் ஆண்டில், **ஒடிசா பாம்புக்கடியை மாநில-குறிப்பிட்ட பேரிடராக** அறிவித்தது.
5. **2020** இல், கேரளா கோவிட் ஒரு மாநில குறிப்பிட்ட பேரழிவாக அறிவித்தது.

### அகநாசினி கழிமுகம்

1. **கர்நாடகாவின் மத்திய உத்தர கன்னடா மாவட்டத்தில்** உள்ள அகநாசினி நதி ராம்சர் அந்தஸ்து பெறுவதற்குப் பரிந்துரை செய்யப்பட உள்ளது.
2. அகநாசினி நதியானது, **மேற்குத் தொடர்ச்சி மலையில்** உருவாகி **மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில்** கலக்கிறது என்பதோடு இந்த நதியின் வழித்தடத்தின் பெரும் பகுதியானது காடுகள் மிகுந்த **மலையிடுக்குகள் மற்றும் பள்ளத்தாக்குகளில் பாய்ந்து** செல்கின்றது.
3. இந்த அந்தஸ்தினைப் பெறுவதற்கான பட்டியலில் போட்டியாக உள்ள மற்றொரு இடம் கர்நாடகாவின் **மாண்டியா மாவட்டத்தில்** உள்ள **ரங்கனதிட்டு பறவைகள் சரணாலயம்** ஆகும்.

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024




### பாண்டவுல குட்டா

1. **தெலுங்கானாவில்** உள்ள **ஒரே புவிசார் பாரம்பரிய தளமாக** பாண்டவுலா குட்டா அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
2. இது **இமயமலையை விட பழமையானது** மற்றும் **பச்சை, சிவப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை** போன்ற பல்வேறு வண்ணங்களில் **பண்டைய பாறை ஓவியங்களை** காட்சிப்படுத்துகிறது.



3. **ஓவியங்கள் ஸ்வஸ்திகாக்கள், வட்டங்கள், சதுரங்கள் மற்றும் காட்டெருமை,** மிருகம், புலி மற்றும் சிறுத்தை போன்ற விலங்குகள் போன்ற சின்னங்களை சித்தரிக்கின்றன.

4. **புவியியல் பாரம்பரியம்** என்பது புவியியல் அம்சங்களைக் குறிக்கிறது, அவை **புவியின் பரிணாம வளர்ச்சி அல்லது வரலாறு** பற்றிய நுண்ணறிவை புவி அறிவியலுக்கு வழங்குகிறது அல்லது கல்விக்காகப் பயன்படுத்தப்படலாம்.

## இந்தியாவின் பழமையான கோவில்

1. **இந்தியாவின் மிகப் பழமையான கோவிலைக்** கண்டுபிடிப்பதற்காக, **மத்தியப் பிரதேச மாநிலம், பன்னா மாவட்டத்தில்** உள்ள **நாச்னே கிராமத்தில் இரண்டு மேடுகளை அகழ்வாராய்ச்சி** செய்து வருகிறது இந்திய தொல்பொருள் ஆய்வு நிறுவனம் (AS).
2. அகழ்வாராய்ச்சி தளங்கள் **இரண்டு பழமையான கோயில்களுக்கு அருகில் உள்ளன - குப்தர் கால பார்வதி கோயில்** மற்றும் **கலாச்சூரி வம்சத்தால் கட்டப்பட்ட சௌமுகி கோயிலுக்கு** அருகில்.
3. மத்தியப் பிரதேசம், குப்தர் காலத்தைச் சேர்ந்த **'சாஞ்சி 17'** உட்பட பல பழமையான கோயில்களைக் கொண்டுள்ளது, இது கிபி 5 ஆம் நூற்றாண்டுக்கு முந்தையது.
4. இக்கோயில் இன்றுவரை **இந்தியாவில் எஞ்சியிருக்கும் மிகப் பழமையான** முழுமையான கோயிலாகக் கருதப்படுகிறது.
5. அகழ்வாராய்ச்சிக் குழு **குப்தர் காலத்துக்கு முந்தைய கோயில்களைக்** கண்டுபிடிக்கும் என்று நம்புகிறது.

# தேசிய செய்திகள்

## இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையம்

1. இந்தியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையமான **தேசிய டால்பின் ஆராய்ச்சி மையத்தை** (என்டிஆர்சி) பீகார் முதல்வர் **பாட்னாவில்** திறந்து வைத்தார்.
2. இது பாட்னா பல்கலைக்கழக வளாகத்திற்குள் **கங்கைக் கரையில்** அமைந்துள்ளது.

## எல்லை தாண்டிய புலிகள் பாதுகாப்பு

1. **இந்தியாவும் வங்காளதேசமும் ஒருங்கிணைந்த புலிகள் வாழ்விடப் பாதுகாப்புத் திட்டத்தின் (ITHCP)** கீழ் **சுந்தர்பான்ஸில் எல்லை** தாண்டிய புலிகள் பாதுகாப்புக்காக ஒத்துழைத்தன.

## இந்தியாவின் விண்வெளி நிலையம்

1. **2035** ஆம் ஆண்டுக்குள் இந்தியா தனது சொந்த விண்வெளி நிலையத்தை உருவாக்கி, இத்துறையின் வணிக மையமாகவும் மாறும் என்று பிரதமர் அறிவித்தார்.

## இந்தியாவின் மிக நீளமான கம்பிவிட - தாங்கு பாலம்

1. **குஜராத்தின் துவாரகாவில்** இந்தியாவின் மிக நீளமான கம்பிவிட - தாங்கு பாலம் திறக்கப்பட்டது.
2. **'சுதர்ஷன் சேது' ஓகா மற்றும் பெய்ட்** துவாரகா தீவை இணைக்கிறது.
3. **'சிக்னேச்சர் பாலம்'** என்று அழைக்கப்பட்ட இந்த பாலம், 'சுதர்சன் சேது' அல்லது சுதர்சன் பாலம் என மறுபெயரிடப்பட்டுள்ளது.



## SAKHI செயலி

1. **விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்** (VSSC) ஆனது, 'SAKHI' என்ற பல்பயன்பாட்டு செயலியை உருவாக்கியுள்ளது.
2. SAKHI என்பது **'பணியாளர் குழுக்களுக்கு இடையிலான தகவல் தொடர்பிற்கான விண்வெளி சார்ந்த உதவி மற்றும் தகவல் மையம்'** என்பதைக் குறிக்கிறது.

3. **ககன்யான் விண்வெளி ஆய்வுப்** பயணத்தில் ஈடுபட்டுள்ள **விண்வெளி வீரர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களைத்** தேடுவது அல்லது **ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்வது** போன்ற பல பணிகளைச் செய்ய இது உதவும்.
4. **இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு மற்றும் ஆக்ஸிஜன் செறிவு** போன்ற விண்வெளி வீரர்களின் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களையும் SAKHI செயலி மிக உன்னிப்பாகக் **கண்காணிக்கும்.**

## PM-SURAJ இணைய தளம்

1. **'பிரதான் மந்திரி சமாஜிக் உத்தன் மற்றும் ரோஸ்கர் ஆதாரித் ஜன்கல்யான்'** (PM-SURAJ) என்ற **தேசிய இணைய தளம்** ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
2. இந்த இணைய தளமானது, **சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவினருக்கு கடன் உதவி** வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## சுவயம் பிளஸ் இயங்குதளம்

1. **மத்திய கல்வி அமைச்சகம்** ஆனது, தொழில்துறையுடன் இணைந்து உருவாக்கப்பட்ட கல்விப் படிப்புகளை வழங்குவதற்காக என்று 'சுவயம் பிளஸ்' என்ற இயங்கு தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
2. **சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம்** ஆனது இந்த 'சுவயம் பிளஸ்' இயங்குதளத்தை இயக்கும்.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

3. இது கல்லூரி மாணவர்கள் மற்றும் வாழ்நாள் முழுவதும் **கல்வி கற்பவர்களின் வேலை வாய்ப்பை** மேம்படுத்த முயல்கிறது.

## சக்சு இயங்கு தளம்

1. மத்திய அரசானது, **'சக்சு' மற்றும் 'எண்ணிம உளவு (நுண்ணறிவு) இயங்கு தளம்'** ஆகிய **இரண்டு புதிய எண்ணிம தளங்களைத்** தொடங்கியுள்ளது.
2. **சந்தேகத்திற்குரிய மோசடித் தொலைபேசி அழைப்புகள்** மற்றும் **குறுஞ்செய்திகள்** குறித்துப் புகாரளிப்பதற்காக என்று சந்தாதாரர்களுக்கு அதிகாரம் அளிப்பதை இந்த இயங்கு தளம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
3. 'சக்சு' மற்றும் 'எண்ணிம உளவு இயங்கு தளம்' ஆகிய புதிய தளங்களானது **சஞ்சார் சாத்தி இணைய தளத்துடன்** ஒருங்கிணைக்கப் படும்.

## வர்த்தக இரகசியங்கள் மீதான 22வது சட்ட ஆணையம்

1. 22வது சட்ட ஆணையம் ஆனது, தகவல் அளிப்போருக்கான **பாதுகாப்பு, கட்டாய உரிமம், அரசு பயன்பாடு மற்றும் பொது நலன்** ஆகியவை தொடர்பான பல்வேறு விதி விலக்குகளுடன் வர்த்தக ரகசியங்களைப் பாதுகாப்பதற்காக என்று புதியச் சட்டத்தை அறிமுகப் படுத்துவதற்குப் பரிந்துரைத்துள்ளது.
2. **நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையில்** 22வது சட்ட ஆணையம் அமைக்கப்பட்டது.
3. **வர்த்தக இரகசியங்கள்** என்பது விற்கப்படும் அல்லது உரிமம் பெற்ற இரகசியத் தகவல்களின் அறிவுசார் சொத்துரிமைகள் ஆகும்.

## KIRTI திட்டம்

1. **கேலோ இந்தியா எழுச்சி பெறும் திறமைகளை அடையாளம் காணுதல்** (KIRTI) திட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.

2. இந்தத் திட்டம் ஆனது **ஒன்பது முதல் 18 வயது** வரையிலான பள்ளிக் குழந்தைகளை இலக்காகக் கொண்டது.
3. இது மிகவும் **ஆரோக்கியமான வாழ்க்கைக்கான ஒரு கருவியாக விளையாட்டைப் பயன்படுத்துவதில்** நன்கு கவனம் செலுத்துவதோடு, முதன்மையாக போதைப் பொருள் மற்றும் மின்னணுச் சாதனங்களின் மூலம் உருவாகும் பல்வேறு கவனச் சிதறல்களிலிருந்து இளையோர்களை விலக்கி வைக்கிறது.
4. **10 விளையாட்டுத் துறைகளில்** முதல் கட்டமாக ஐம்பதாயிரம் விண்ணப்பதாரர்கள் குறித்த மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## சிப்கோ இயக்கத்தின் 50 ஆண்டுகள்

1. **1973 ஆம் ஆண்டின்** தொடக்கத்தில் **உத்தரகாண்டில் (சமோலி கோபேஷ்வர்)** தொடங்கிய சிப்கோ இயக்கம் அதன் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
2. இதில் **கிராம மக்கள், குறிப்பாக பெண்கள், காடழிப்பு மற்றும் வணிக ரீதியிலான** மரங்களை வெட்டுவதை எதிர்த்து, மரங்களை வெட்டுவதைத் தடுக்க மரங்களை கட்டிப்பிடித்து போராட்டம் நடத்தினர்.



3. இந்த இயக்கத்திற்கு சிப்கோ என்று பெயரிடப்பட்டது, அதாவது **ஹிந்தியில் "கட்டிப்பிடிப்பது".**

4. **சுந்தர்லால் பகுகுணா மற்றும் சண்டி பிரசாத் பட்** போன்ற **சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்** உள்ளூர் சமூகங்களை அணிதிரட்டுவதில் முக்கிய பங்கு வகித்தனர் மற்றும் இயக்கத்திற்கு தேசிய மற்றும் சர்வதேச ஆதரவைப் பெற்றனர்.

## புவிசார் குறியீடுகள்

1. சமீபத்தில் சில தயாரிப்புகளுக்கு புவிசார் குறியீடு (GI) டேக் கொடுக்கப்பட்டது, இதில் அடங்கும்.
   - கட்டாக் ரூபா தாரகாசி (வெள்ளி ஃபிலிகிரீ)
   - பங்களார் மஸ்லின் - மேற்கு வங்காளம்.
   - நரசாபூர் குக்கீ சரிகை பொருட்கள் - ஆந்திரப் பிரதேசம்
   - கட்ச் ரோகன் கைவினை - குஜராத்
   - ரத்லம் ரியாவன் லஹ்சுன் (பூண்டு) - மத்திய பிரதேசம்
   - அம்பாஜி ஒயிட் மார்பிள் - குஜராத்
   - திரிபுரா ரிசா டெக்ஸ்டைல் - திரிபுரா
   - ஹைதராபாத் லாக் வளையல்கள் - தெலுங்கானா
   - மஜூலி மாஸ்க் - அசாம்
   - மஜூலி கையெழுத்துப் பிரதி ஓவியம் - அசாம்

# சர்வதேச செய்திகள்

## FATF சாம்பல் நிறப் பட்டியல்

1. நிதி நடவடிக்கை பணிக்குழுவின் சாம்பல் பட்டியலில் இருந்து **ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீக்கப்பட்டது.**
2. **பார்படாஸ், ஜிப்ரால்டர் மற்றும் உகாண்டா** ஆகியவை சாம்பல் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன, கென்யா மற்றும் நமீபியா ஆகியவை அதில் இடம் பெற்றன.


Website: www.shikshabyswathikaiasacademy.com
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Follow insta : tnpsc.shikshabyswathika
Phone : 8608830102/ 9047051911

### பாகிஸ்தானில் முதல் பெண் முதல்வர்

1. மூன்று முறை **முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின்** மகளும், மூத்த தலைவருமான **மரியம் நவாஸ்**, பாகிஸ்தானின் **பஞ்சாப் மாகாணத்தின்** முதல் பெண் முதலமைச்சரானார்.
2. அவரது கட்சி **தேர்தலைப் புறக்கணித்ததால்** எந்த வாக்குகளும் பெறாத **ராணா அஃப்தாப்பை** அவர் தோற்கடித்தார்.




## இராணுவ செய்திகள்

### தர்ம கார்டியன்

1. **இந்திய ராணுவம் மற்றும் ஜப்பான்** தரை தற்காப்புப் படைக்கு இடையேயான 'தர்ம கார்டியன்' கூட்டு ராணுவப் பயிற்சியின் 5வது பதிப்பு **ராஜஸ்தானில்** நடைபெற்று வருகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### ஆந்த்ரோபோட்ஸ்

1. ஓர் ஆய்வக அமைப்பில், **நியூரான்களை இயக்கும் மற்றும் மறுசீரமைக்கும் திறன்** கொண்ட **மனித செல்களைப்** பயன்படுத்தி ஆராய்ச்சியாளர்கள் ஒரு சிறிய ரோபோக்களை (எந்திரங்களை) உருவாக்கியுள்ளனர்.
2. அவை 'ஆந்த்ரோபோட்ஸ்' என்று அழைக்கப்படுகின்றன.
3. இந்த **உயிரிப் பொறியியல் அமைப்புகள் மனித மூச்சுக்குழாய் செல்களைக்** கொண்டிருக்கின்றன என்பதோடு பல்வேறு வடிவங்கள் மற்றும்


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

பரிமாணங்களில் இவை **தங்களைத் தானாகக் கட்டமைக்கும்** திறனைக் கொண்டுள்ளன.

4. **மீளுருவாக்கம், மீட்பு மற்றும் நோய்களை மேலாண்மை செய்தல்** ஆகிய பல்வேறு நோக்கங்களுக்காக இந்த உயிரி எந்திரங்கள் ஒரு புத்தாக்கமிக்க கருவிகளாக நன்கு பயன்படுத்தப் படலாம்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஒற்றை இன வளங்காப்பு செயல் திட்டம் : CMS COP14

1. CMS COP14 **அழுங்காமை இனங்களைப்** பாதுகாப்பதற்கான ஒற்றை இன வளங்காப்பு செயல் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளது.
2. இது **ஆப்பிரிக்க-யூரேசிய இடம் பெயர்ந்த நீர்ப்பறவைகளின்** (AEWA) வளங்காப்பு ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
3. அழுங்காமை இனமானது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் **மிகவும் அருகி வரும் இனமாக** வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## குனோ தேசிய பூங்காவில் உள்ள சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை

1. இந்தியாவின் **மத்தியப் பிரதேசத்தில்** உள்ள **குனோ தேசிய பூங்காவில் உள்ள காமினி** எனப்படும் **தென்னாப்பிரிக்க சிவிங்கிப் புலி** சமீபத்தில் **ஐந்து குட்டிகளை** ஈன்றதையடுத்து, இந்தியாவில் பிறந்த **சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை 13** ஆக உயர்ந்துள்ளது.
2. குட்டிகள் உட்பட மொத்த சிவிங்கிப் புலிகளின் எண்ணிக்கை **தற்போது 26 ஆக உள்ளது.**
3. இந்தியாவின் **வளங்காப்புத் திட்டத்திற்கு** இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.
4. **2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதியன்று** எட்டு நமீபிய சிவிங்கிப் புலிகள் குனோ தேசிய பூங்காவிற்கு கொண்டு வரப்பட்டன.

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## வெப்பமயமாதலுக்கேற்ப நுண்பாசிகளின் தகவமைவு

1. **பெருங்கடலில் உணவுச் சங்கிலியின்** அடித்தளமாக இருந்து **வளிமண்டலத்தில் இருந்து கார்பன் டை ஆக்சைடை** உறிஞ்சும் நுண்பாசிகள் (மைக்ரோஅல்காக்கள்) ஆனது **புவி வெப்பமடைதலை** எதிர்கொள்ள ஒரு தனித்துவமான உத்தியை சார்ந்திருப்பதாகத் தோன்றுகிறது.
2. பருவநிலை மாற்றம் கடலில் ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும் அளவைக் குறைப்பதால், கடல் வாழ் நுண்ணுயிர்கள் அல்லது **யூகாரியோடிக் (நிலையற்ற உட்கரு கொண்ட)** செல் கொண்ட **மிதவைத் தாவரங்கள் ரோடாப்சின்** என்ற **புரதத்தை எரித்து** தனது ஊட்டத்தினைப் பெறுகின்றன.
3. **இது மங்கலான ஒளியில் கண் பார்வை தெளிவிற்குக்** காரணமான மனித கண்ணில் உள்ள புரதத்துடன் தொடர்புடையதாகும்.
4. இந்த **ஒளி உணர் புரதம்** ஆனது, வழக்கமான **குளோரோபிலுக்குப் பதிலாக சூரிய ஒளியின்** உதவியுடன் நுண்பாசிகள் செழித்து வாழ உதவுகிறது.
5. அவை **ஆற்றலையும் உணவையும் உருவாக்க ஒளியை உறிஞ்சுகின்ற** குளோரோபில் அடிப்படையிலான ஒளிச்சேர்க்கையைப் போலவே கடலில் உள்ள அதிக ஒளியை உறிஞ்சுகிறது.

## FARM திட்டம்

1. **வேளாண்மையில் வேதிப்பொருட்கள் பயன்பாட்டினைக் குறைத்தலுக்கு நிதியளித்தல் மற்றும் மேலாண்மைத் திட்டம்** (FARM) என்பது வேளாண்மையில் வேதிப்பொருட்கள் பயன்பாட்டினால் ஏற்படும் **மாசுபாட்டை எதிர்கொள்வதற்கான** முன்னெடுப்பாகும்.
2. **இதற்கு உலக சுற்றுச்சூழல் நிதியம் மூலம் நிதியளிக்கப்படுகிறது** என்பதோடு இந்தத் திட்டத்திற்கு **ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல்** திட்ட அமைப்பு தலைமை தாங்குகிறது.
3. **வங்கிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள்**, விவசாயிகளுக்கு ஏற்ற வகையில் கொள்கை மற்றும் நிதி ஆதாரங்களை **மறுசீரமைப்பதற்காக** வேண்டி இது நடவடிக்கையினை விரிவுபடுத்துகிறது.

4. இந்த **வளங்கள், நச்சுத்தன்மை கொண்ட வேளாண்** பயன்பாட்டு இரசாயனங்களுக்கு மாற்றாக குறைந்த மற்றும் இரசாயனமற்ற மாற்றுகளைப் பயன்படுத்தவும், சிறந்த நடைமுறைகளை நோக்கிய மாற்றத்தை மேற்கொள்ளவும் உதவும்.
5. இந்த ஐந்தாண்டுத் திட்டமானது **51,000 டன்** அளவிலான **அபாயகரமான பூச்சிக் கொல்லிகள்** மற்றும் **20,000 டன் அளவிலான நெகிழிக் கழிவுகள்** உருவாவதைத் தடுக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் 2024

1. 2024 ஆம் ஆண்டு கேலோ இந்தியா குளிர்கால விளையாட்டுப் போட்டிகள் **இரண்டு கட்டங்களாக** நடத்தப்பட்டன.
2. ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடத்தப்பட்ட **2020, 2021 மற்றும் 2023** ஆகிய மூன்று முந்தைய போட்டிகளிலும் ஜம்மு மற்றும் காஷ்மீர் அணி வெற்றி பெற்றன.
3. **லடாக் ஒன்றியப் பிரதேசம்** ஆனது இந்த ஆண்டு போட்டிகளை முதல் முறையாக எடுத்து நடத்தியது.

| Rank | State/UT/Team | Gold medals | Silver medals | Bronze medals | Total medals |
|---|---|---|---|---|---|
| 1 | Army | 10 | 5 | 6 | 21 |
| 2 | Karnataka | 9 | 2 | 0 | 11 |
| 3 | Maharashtra | 7 | 8 | 7 | 22 |
| 4 | Himachal Pradesh | 4 | 4 | 9 | 17 |
| 5 | Uttarakhand | 3 | 3 | 1 | 7 |

## பாரிஸ் ஒலிம்பிக் 2024

1. இந்திய ஒலிம்பிக் சங்கம் (IOA) **டேபிள் டென்னிஸ் வீரர் அச்சந்தா ஷரத் கமலை** இந்திய ஒலிம்பிக் குழுவின் **கொடி ஏந்திச் செல்பவராக** நியமித்துள்ளது.


Website: www.shikshabyswathikaiasacademy.com Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy Phone : 8608830102/ 9047051911

2. இந்திய ஒலிம்பிக் சங்கம் குத்துச்சண்டை வீராங்கனை **மேரி கோமை இந்திய ஒலிம்பிக் குழுவின் ஒருங்கிணைப்பு** குழு தலைவராக நியமித்துள்ளது.
3. 2024 ஒலிம்பிக் போட்டிகள் **ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11, 2024** வரை **பிரான்சின் பாரிஸில்** நடைபெற உள்ளது.

# விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சங்கீத நாடக அகாடமி விருதுகள்

1. **2022 மற்றும் 2023** ஆம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகாடமி விருதுகளை, கலைத்துறையில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்கு **ஜனாதிபதி திரௌபதி முர்மு** வழங்கினார்.
2. இது ஒரு கலை நிகழ்ச்சிக்கு அவர் ஆற்றிய சிறப்பான **பங்களிப்பிற்காக கலைஞர்களுக்கு** வழங்கப்படும் உயரிய கௌரவமாகும்.
3. அகாடமி விருதுகள் **முதன்முதலில் 1952** இல் வழங்கப்பட்டன.

## அவ்வையார் விருது 2024

1. 2024ஆம் ஆண்டுக்கான அவ்வையார் விருது இலக்கியத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிய எழுத்தாளர் **பாஸ்டினா சூசைராஜ் என்ற பாமாவுக்கு** அறிவிக்கப்பட்டுள்ளது.
2. இவரது **"கருக்கு"** நாவல் **ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 2000** ஆம் ஆண்டுக்கான **குறுக்கெழுத்து புத்தக விருதுகளை** வென்றது.
3. **2012** ஆம் ஆண்டு **முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் சர்வதேச மகளிர் தினத்தை** முன்னிட்டு இந்த விருது நிறுவப்பட்டது.

## தேசிய படைப்பாளிகள் விருது 2024

1. **இணையதள உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களுக்கு** புதிதாக உருவாக்கப்பட்ட தேசிய படைப்பாளிகள் விருதை பிரதமர் நரேந்திர மோடி வழங்கினார்.

2. **சிறந்த கதைசொல்லிக்கான விருதை தமிழகத்தைச் சேர்ந்த கீர்த்திகா கோவிந்தசாமி** பெற்றார்.




## சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு பரிசு 2023

1. **எழுத்தாளர் கண்ணையன் தக்ஷிணாமூர்த்தியின் 'கருங்குன்றம்' புத்தகம்** 2023 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி மொழிபெயர்ப்பு பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.
2. **மாமாங் தாயின்** ஆங்கில நாவலான **'தி பிளாக் ஹில்'** - ஐ **கன்னையன் தக்ஷிணாமூர்த்தி** தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## 'ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ' விருது

1. **நரேந்திர மோடிக்கு** பூடானின் உயரிய கௌரவமான ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ' விருது வழங்கப்பட்டது.
2. இந்த **மதிப்புமிக்க விருதைப்** பெறும் **முதல் வெளிநாட்டுத் தலைவர்** மோடி ஆவார்.
3. இந்த விருதானது **இந்தியா - பூடான் நட்புறவை** வலுப்படுத்தும் நரேந்திர **மோடியின் பங்களிப்பையும்,** மக்களை மையமாகக் கொண்ட தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்கிறது.

## சென்னை இசை அகாடமி விருதுகள் 2024

1. மெட்ராஸ் மியூசிக் அகாடமி **டி.எம்.கிருஷ்ணாவுக்கு** 2024க்கான **சங்கீத கலாநிதி விருதை** வழங்கியது.
2. இது கர்நாடக இசைத் துறையில் மிக உயரிய விருதாகக் கருதப்படுகிறது.

3. **2024 ஆம் ஆண்டிற்கான** நிருத்ய கலாநிதி விருது **டாக்டர் நீனா பிரசாத்துக்கு** வழங்கப்பட்டது.

## ஏபெல் பரிசு

1. 2024 ஆம் ஆண்டிற்கான ஏபெல் பரிசு சமீபத்தில் **பிரெஞ்சு கணிதவியலாளர் மைக்கேல் தலகிராண்டிற்கு** வழங்கப்பட்டது.
2. இவ்விருது **கணிதத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை** வழங்கிய அறிஞர்களுக்கு வழங்கப்படுகிறது.
3. இவ்விருது **2003 முதல் வழங்கப்படுகிறது**.

## பாரத ரத்னா 2024

1. **ஜனாதிபதி திரௌபதி முர்மு** 2024 ஆம் ஆண்டிற்கான **பாரத ரத்னா விருதை ஐந்து நபர்களுக்கு** வழங்கினார்.
    - பி.வி. நரசிம்ம ராவ்
    - பி. சௌத்ரி சரண் சிங்
    - கர்பூரி தாக்கூர்
    - டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன்
    - எல்.கே.அத்வானி
2. ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் எல். கே. அத்வானியைத் தவிர்த்து **நான்கு விருதுகள்** இறப்பிற்கு பின் வழங்கப்பட்டன.


**குறிப்பு:**

- பாரத ரத்னா இந்திய குடிமகனுக்கு வழங்கப்படும் இந்தியாவின் உயரிய விருதாகும்.
- **நிறுவப்பட்ட ஆண்டு** - 1954
- இலக்கியம், அறிவியல் மற்றும் கலை போன்ற துறைகளில் ஆற்றும் சேவைக்காக இவ்விருந்து வழங்கப்படுகிறது.

## ஈராஸ்மஸ் பரிசு 2024

1. **புகழ்பெற்ற எழுத்தாளர் அமிதவ் கோஷ் 2024** ஆம் ஆண்டின் மதிப்புமிக்க எராஸ்மஸ் பரிசினைப் பெற்றுள்ளார்.

2. **'கற்பனைக்கும் எட்டாதவற்றினைக் கற்பனை செய்தல்'** என்ற கருப்பொருளில் அவரது உணர்ச்சி மிக்க எழுத்து சார்ந்தப் பங்களிப்புக்காக அவர் இந்தப் பரிசைப் பெற்று உள்ளார்.
3. இவர் **2018 ஆம் ஆண்டில்** இந்தியாவின் மிக **உயரிய இலக்கிய விருதான ஞானபீட விருதைப்** பெற்றுள்ளார்.



## தங்கப் புத்தகம் விருது 2024

1. **எழுத்தாளர் ராக்கி கபூர் Breaking Free Embracing Me - healing from childhood abuse and Toxic Conditioning** என்ற தலைப்பிலான அவரது 26வது புத்தகத்திற்காக தனது **இரண்டாவது கோல்டன் புக்** (தங்கப் புத்தகம்) விருதை வென்றுள்ளார்.
2. 2024 ஆம் ஆண்டு தங்கப் புத்தக விருதுகள் பெற்ற இதர சில வெற்றியாளர்கள்:

- **ஸ்ரீவித்யா பாலகிருஷ்ணன்** - Tales in verse from distant lands,
- **நவீன் பாலனி** - Echoes of Tomorrow: The Responsible AI Awakening,
- **B.K.ஷிவானி** - The Power of One Thought: Master Your Mind, Master Your Life,
- **சஹானா முரளி** - Fish can fly,
- **பிரகாஷ் நர்கடே** - Unbox Your Creativity.


Website: www.shikshabyswathikaiasacademy.com Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy Phone : 8608830102/ 9047051911

# நியமனங்கள்

### ஊழல் தடுப்பு குறை தீர்ப்பாளர் லோக்பால்

1. **உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.எம். கான்வில்கர்** ஊழல் தடுப்பு குறை தீர்ப்பாளரான லோக்பால் தலைவராக நியமிக்கப்பட்டார்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகளாவிய அறிவுசார் சொத்துக் குறியீடு 2024

1. **அமெரிக்க வர்த்தகச் சபையானது** அதன் **12வது** சர்வதேச அறிவுசார் சொத்துக் குறியீட்டினை வெளியிட்டது.
2. இந்தக் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட **55 நாடுகளில் 38.64% மதிப்பெண்களுடன் இந்தியா 42வது இடத்தில்** உள்ளது.
3. இந்தப் **பட்டியலில் முதலிடத்தில் அமெரிக்காவும்**, அதைத் தொடர்ந்து **ஐக்கியப் பேரரசு மற்றும் பிரான்ஸ்** ஆகிய நாடுகளும் இடம் பெற்றுள்ளன.

### உலக இணைப்பு அறிக்கை, 2024

1. **OHL மற்றும் நியூயார்க் பல்கலைக்கழகத்தின்** ஸ்டெர்ன் வணிகக் கல்லூரி ஆகியவை **"புதிய OHL உலக இணைப்பு அறிக்கை 2024"** என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளன.
2. இந்த அறிக்கையானது வர்த்தகம், மூலதனம், தகவல் ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் உலகம் முழுவதும் மக்கள் எவ்வாறு இடம் பெயர்கின்றனர் என்பதைக் கண்காணிப்பதோடு, **181 நாடுகள்** மற்றும் பிரதேசங்களின் **உலகமயமாக்கலை** மதிப்பிடுகிறது.
3. இந்த அறிக்கையானது, அதிகளவில் உலகமயமாக்கப்பட்ட **ஒரு நாடாக சிங்கப்பூர் நாட்டினை** மதிப்பிட்டுள்ள நிலையில் அதைத் தொடர்ந்து **நெதர்லாந்து இடம் பெற்று உள்ளது.**

4. **ஐரோப்பா அதிகளவில் உலகளாவிய இணைப்பு கொண்ட பிராந்தியமாகும்** என்ற நிலையில் அதைத் தொடர்ந்து வட அமெரிக்கா மற்றும் **'மத்தியக் கிழக்கு & வட ஆப்பிரிக்கா'** ஆகியப் பிராந்தியங்கள் உள்ளன.

| | | | | Change 2017 to 2022 | |
|---|---|---|---|---|---|
| GDP | Rank | Country | Score | Rank | Score |
| 1. | 44 | United States | 57 | -10 | 0 |
| 2. | 80 | China | 50 | -10 | -1 |
| 3. | 50 | Japan | 55 | -1 | +1 |
| 4. | 13 | Germany | 64 | +1 | +2 |
| 5. | 62 | India | 52 | +1 | +1 |
| 6. | 9 | United Kingdom | 69 | -1 | +2 |
| 7. | 23 | France | 61 | -2 | +1 |
| 8. | 91 | Russian Federation | 49 | -31 | -3 |
| 9. | 29 | Canada | 59 | 0 | +1 |
| 10. | 36 | Italy | 58 | +3 | +2 |

## மனித வளர்ச்சிக் குறியீடு (HDI) 2023- 24

1. சமீபத்தில் **ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தால்** (UNDP) மனித வளர்ச்சி அறிக்கை 2023–2024 வெளியிடப்பட்டது.
2. இந்த அறிக்கையின் கருப்பொருள் : **"Breaking the Gridlock: Reimagining Cooperation in a Polarized World"** என்பதாகும்.
3. 2022 இல் **இந்தியா 134 வது இடத்தில்** உள்ளது.
4. இந்தியா மனித வளர்ச்சிக் குறியீட்டில் **நடுத்தர பிரிவில்** உள்ளது.
5. 1990 மற்றும் 2022 க்கு இடைப்பட்ட காலத்தில் 1990 இல் **0.434 இல் இருந்து 2022 இல் 0.644 ஆக HDI மதிப்பு 48.4%** அதிகரித்துள்ளது.
6. 2022 இல் இந்தியாவின் பிறக்கும் போதான **வாழ்நாள் எதிர்பார்ப்புக் காலம் 67.7 ஆண்டுகள்** ஆகும்.
7. **சராசரி பள்ளிப்படிப்பின் காலம்** (EYS) **12.6 ஆண்டுகள்** ஆகும்.
8. மொத்த **தேசிய வருமானத்தில்** (GNI) **தனிநபர் வருமானம் $6,951** ஆகும்.


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## பாலின சமத்துவமின்மை குறியீடு

1. **சமீபத்தில் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தால்** (UNDP) பாலின சமத்துவமின்மை குறியீடு 2022 வெளியிடப்பட்டது.
2. 193 நாடுகளில் **இந்தியா 0.437 மதிப்பெண்களுடன் 108 வது இடத்தில்** உள்ளது.
3. 2021 தரவரிசையில் **191 நாடுகளில் 0.490** மதிப்பெண்களுடன் **122 வது இருந்த இந்தியா 14 இடங்கள்** முன்னேறியுள்ளது.

## உலக மகிழ்ச்சிக் குறியீடு (WHR) 2024

1. உலக மகிழ்ச்சிக் குறியீடானது **ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சித் தீர்வுகளுக்கான** வலையமைப்பால் வெளியிடப்படுகிறது.
2. தனிநபர் மொத்த உள்நாட்டு ஆரோக்கியமான ஆயுட்காலம், ஒருவரை சார்ந்திருத்தல், வாழ்க்கைத் தேர்வுகளைச் செய்வதற்கான சுதந்திரம், தாராள மனப்பான்மை மற்றும் ஊழல் இன்மை ஆகிய **ஆறு குறியீடுகளைப்** பயன்படுத்தி இந்த குறியீடு கணக்கிடப்படுகிறது.
3. இந்த குறியீட்டில் **இந்தியா 126வது** இடத்தில் உள்ளது.
4. தொடர்ந்து **ஏழாவது ஆண்டாக பின்லாந்து** முதலிடத்திலும், டென்மார்க், ஐஸ்லாந்து மற்றும் ஸ்வீடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.

## காற்றின் தர அறிக்கை 2023

1. காற்று தர அறிக்கை 2023 ஐ **சுவிஸ் அமைப்பான IQAir** சமீபத்தில் வெளியிட்டது.

**முக்கிய கண்டுபிடிப்புகள்:**

2. **வங்கதேசம் மற்றும் பாகிஸ்தானுக்கு** அடுத்தபடியாக **இந்தியா மூன்றாவது** அதிக மாசுபட்ட நாடாக இருந்தது.
3. **உலகின் மிகவும் மாசுபட்ட தலைநகரமாக புது தில்லி** தரப்படுத்தப்பட்டுள்ளது.
4. **பீகாரில் உள்ள பெகுசராய்** உலகின் மிகவும் **மாசுபட்ட பெருநகரப் பகுதியாக** உருவெடுத்துள்ளது.
5. உலகின் மிகவும் மாசுபட்ட **50 நகரங்களில் 42 இந்தியாவில்** உள்ளன.


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

# மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

## உணவு வீணாக்கக் குறியீட்டு அறிக்கை 2024

1. **'ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) மற்றும் கழிவு மற்றும் வளங்கள் செயல் திட்டம் (WRAP)** ஆகியவற்றால் உணவு வீணாக்கக் குறியீட்டு அறிக்கை 2024 வெளியிடப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்**

2. 2022ம் ஆண்டில் உலகெங்கிலும் உள்ள **குடும்பங்கள் ஒரு நாளைக்கு ஒரு பில்லியனுக்கும்** அதிகமான உணவை வீணாக்குகின்றன.
3. 2022ம் ஆண்டில் **1.05 பில்லியன் டன் உணவுக்கழிவுகள்** உருவாக்கப்பட்டன.
4. இந்தியாவின் தனிநபர் உணவுக்கழிவு ஆண்டுக்கு **55 கிலோ ஆகும்.**
5. இக்குறியீட்டில் உள்ள **125** நாடுகளில் **இந்தியா 111வது இடத்தில்** உள்ளது.

## முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| **மார்ச் 1** | **உலக கடற்புல் தினம்** | அனைவரின் ஆரோக்கியத்தையும் பாதுகாத்தல், அனைவரின் உரிமைகளையும் பாதுகாத்தல். |
| **மார்ச் 1** | **பூஜ்ஜிய பாகுபாடு தினம்** | வளமான கடல் புல், வளமான கிரகம். |
| **மார்ச் 2** | **உலக நிலையான ஆற்றல் தினம்** | வேகமான, திறன்மிக்க, நெகிழ் திறன் மிக்க ஆற்றல் பரிமாற்றம். |
| **மார்ச் 3** | **உலக வனவிலங்கு தினம்** | மக்களையும் கோளினையும் இணைத்தல்: வனவிலங்குப் பாதுகாப்பில் எண்ணிமம் சார்ந்த புத்தாக்கங்களை ஆராய்ந்து செயல்படுத்துதல். |


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

| | | |
|---|---|---|
| மார்ச் 4 | தேசிய பாதுகாப்பு தினம் | சுற்றுச்சூழல் சமூக ஆளுமை சிறப்புக்காக பாதுகாப்பு தலைமையின் மீது கவனம் செலுத்துதல். |
| மார்ச் 4 | உலக உடல் பருமன் தினம் | உடல் பருமன் மற்றும் சில பற்றிய கருத்துக்களை வெளிக் கொணர்தல். |
| மார்ச் 7 | ஜன் ஔஷாதி திவாஸ் | • ஜன் ஔஷாதி திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுவான மருந்துகளின் இந்த தினம் பயன்பாட்டை ஊக்கப்படுத்தவும் அனுசரிக்கப்படுகிறது.<br>குறிப்பு<br>• பொது மருந்துகளை மலிவு விலையில் வழங்குவதற்காக நவம்பர் 2008 இல் ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துத் துறையால் பிரதான் மந்திரி பாரதிய ஜன் ஔஷாதி பரியோஜனா தொடங்கப்பட்டது. |
| மார்ச் 8 | சர்வதேச மகளிர் தினம் | பெண்களின் முன்னேற்றத்தில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை விரைவுப்படுத்துங்கள் |
| மார்ச் 10 | CISFன் 55வது நிறுவன தினம் | ▪ 1969 இல் மத்திய தொழில்துறை பாதுகாப்புப்படை நிறுவப்பட்டதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 10 அன்று CISFன் நிறுவன தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ CISF என்பது ஒரு துணை ராணுவப் பாதுகாப்புப் படை அமைப்பாகும்.<br>▪ இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது. |

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

| | | |
|---|---|---|
| மார்ச் 14 | நதிகளுக்கான நடவடிக்கை தொடர்பான சர்வதேச தினம் | அனைவருக்கும் தண்ணீர் |
| மார்ச் 15 | உலக நுகர்வோர் உரிமைகள் தினம் | நுகர்வோருக்கான நியாயமான மற்றும் பொறுப்பான செயற்கை நுண்ணறிவு |
| மார்ச் 16 | தேசிய தடுப்பூசி தினம் | Vaccines Work For All |
| மார்ச் 18 | உலகம் மறுசுழற்சி தினம் | வாக்குறுதிகளைக் கடைப்பிடித்தல்: நிலைத் தன்மைக்கான உறுதிப்பாடு |
| மார்ச் 20 | சர்வதேச மகிழ்ச்சி தினம் | மகிழ்ச்சிக்காக மீண்டும் இணைதல்: நெகழ்ந்திறன் மிக்க சமூகங்களை உருவாக்குதல் |
| மார்ச் 20 | உலக வாய் சுகாதார தினம் | ஆரோக்கியமான வாய்.. ஆரோக்கியமான உடல் |
| மார்ச் 21 | சர்வதேச காடுகள் தினம் | காடுகள் மற்றும் புதுமை: ஒரு சிறந்த உலகிற்கான புதிய தீர்வுகள் |
| மார்ச் 21 | உலக மனநலிவு நோய் தினம் | பழமையான கருத்துக்களை முடிவுக்கு கொண்டு வருதல் |
| மார்ச் 21 | சர்வதேச இனப் பாகுபாடு ஒழிப்பு தினம் | பத்தாண்டு கால அங்கீகாரம் நீதி மற்றும் மேம்பாடு: ஆப்பிரிக்க வம்சாவளி மக்களுக்கான சர்வதேச தசாப்தத்தைச் செயல்படுத்துதல் |
| மார்ச் 22 | உலக தண்ணீர் தினம் | செழிப்பு மற்றும் அமைதிக்கான நீர் |
| மார்ச் 23 | உலக வானிலை தினம் | At the Frontline of Climate Action |
| மார்ச் 24 | உலக காசநோய் தினம் | Yes! We can end TB. |

## மார்ச் மாத நடப்பு நிகழ்வுகள் – 2024

| | | |
|---|---|---|
| மார்ச் 25 | புவி நேரம் 2024 | ▪ 2024 இல் புவி நேரம் மார்ச் 25 அன்று அனுசரிக்கப்படுகிறது.<br>▪ புவி நேரம் என்பது 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இயற்கைக்கான உலக வனவிலங்கு நிதியத்தின் (WWF) வருடாந்திர முன்முயற்சியாகும்.<br>▪ 180க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களை 1 மணிநேரம் வரை மின் விளக்குகளை அணைக்க ஊக்குவிக்கிறது.<br>▪ **"பூமிக்கான மிக முக்கிய நேரம்"** |
| மார்ச் 27 | **உலக நாடக தினம்** | சர்வதேச நாடக நிறுவனம் (ITI) மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கான உலக அமைப்பு ஆகியவற்றால் ஆண்டுதோறும் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.<br>"Theatre and a Culture of Peace" |
| மார்ச் 30 | **சர்வதேச கழிவுகள் அற்ற தினம்** | ▪ சுற்றுச் UN சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மற்றும் UN மனித குடியேற்றத் திட்ட அமைப்பு (UN-Habitat) ஆகியவற்றால் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ இந்த நாள் முதன்முதலில் 2023 இல் அனுசரிக்கப்பட்டது. |


Website: www.shikshabyswathikaiasacademy.com
Follow insta : tnpsc.shikshabyswathika
You tube : Shiksha By Swathika – An IAS Academy
Phone : 8608830102/ 9047051911